©
தமிழ்நாடு அரசு
2011

[Regd. No. TN/CCN/467/2009-11.
[R. Dis. No. 197/2009.
[விலை: ரூ. 1.60 காசு.

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 24] சென்னை, புதன்கிழமை, ஜூன் 29, 2011
ஆனி 14, திருவள்ளுவர் ஆண்டு–2042

## பகுதி IV— பிரிவு 2 இன் இணைப்பு

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2011–ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 7–ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது; மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன்மூலம் வெளியிடப்படுகிறது:–**

**சட்ட எண் 10/2011**

**2010ஆம் ஆண்டு தமிழ்நாடு சமச்சீர் பள்ளிக் கல்வி முறைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.**

இந்தியக் குடியரசின் அறுபத்து இரண்டாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

1. (1) இந்தச் சட்டம் 2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு சமச்சீர் பள்ளிக் கல்வி முறை (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும். குறுந்தலைப்பும் தொடக்கமும்.

(2) இது, 2011ஆம் ஆண்டு மே திங்கள் 22ஆம் நாளன்றே நடைமுறைக்கு வந்துவிட்டிருப்பதாக கொள்ளப்படுதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 8/2010. 2. (இதன்பின்பு இதில் முதன்மைச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 2010ஆம் ஆண்டு தமிழ்நாடு சமச்சீர் பள்ளிக் கல்வி முறைச் சட்டத்தின் 3ஆம் பிரிவிற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவானது அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது :— 3–ஆம் பிரிவிற்கான திருத்தம்

“3. பள்ளிகள் பொதுவான பாடத்திட்டத்தைப் பின்பற்றுதல் வேண்டும் :-

(1) இம்மாநிலத்திலுள்ள ஒவ்வொரு பள்ளியும் *தமிழ்நாடு அரசிதழில்* அரசினால் அறிவிக்கை செய்யப்படக் கூடியவாறு, அத்தகைய கல்வியாண்டிலிருந்து I முதல் X வரையிலான வகுப்புகளில் ஒவ்வொரு பாடத்திற்காகவும் வாரியத்தால் குறித்துரைக்கப்படக் கூடியதான பொதுவான பாடத்திட்டத்தைப் பின்பற்றுதல் வேண்டும். அரசானது வெவ்வேறு வகுப்புகளுக்கு வெவ்வேறு கல்வி ஆண்டுகளைக் குறித்துரைக்கலாம்.

**(2) (1)**ஆம் உட்பிரிவின் படியான அறிவிக்கையானது பிறப்பிக்கப்படுவது வரையிலும் இம்மாநிலத்திலுள்ள பள்ளி ஒவ்வொன்றிற்கும் பாடத்திட்டமும் பாட நூல்களும் பின்வருமாறு இருத்தல் வேண்டும் :-

(*a*) I மற்றும் VIஆம் வகுப்புகளில் **2010–2011** ஆம் கல்வி ஆண்டுக்கு முன்னதாக இருந்து வந்த முறையானது தொடர்தல் வேண்டும்; மற்றும்

(*b*) II முதல் V வரையிலான வகுப்புகளிலும், VII முதல் X வரையிலான வகுப்புகளிலும் தற்போது இருந்து வருகின்ற முறையானது தொடர்தல் வேண்டும்.".

11ஆம் பிரிவை விட்டுவிடுதல்

**3.** முதன்மைச் சட்டத்தின் **11**ஆம் பிரிவானது விட்டுவிடப்படுதல் வேண்டும்.

12ஆம் பிரிவை விட்டுவிடுதல்

**4.** முதன்மைச் சட்டத்தின் **12**ஆம் பிரிவானது விட்டுவிடப்படுதல் வேண்டும்.

14ஆம் பிரிவை விட்டுவிடுதல்

**5.** முதன்மைச் சட்டத்தின் **14**ஆம் பிரிவானது விட்டுவிடப்படுதல் வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**இரா. கதிர்வேல்,**
*அரசுச் செயலாளர் (பொறுப்பு),*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**ச. சந்திரசேகரன்,**
*இயக்குநர்,*
*தமிழ்ப் பிரிவு, சட்டத் துறை.*

**தமிழ்நாடு சட்டப்பேரவையின் பின்வரும் சட்டமானது, 2011ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 13ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது; மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன்மூலம் வெளியிடப்படுகிறது:—**

**சட்ட எண் 11/2011**

**1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தினை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டம்.**

இந்தியக் குடியரசின் அறுபத்து இரண்டாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

**1.** (1) இந்தச் சட்டம், 2011ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும். குறுந்தலைப்பும் தொடக்கமும்.

(2) இது, 2011ஆம் ஆண்டு மே திங்கள் 25ஆம் நாளன்றே நடைமுறைக்கு வந்திருப்பதாக கொள்ளப்படுதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 30/1983.

**2.** (இதன்பின்பு இதில் முதன்மைச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 1983ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 89ஆம் பிரிவிலுள்ள (1)ஆம் உட்பிரிவிற்கான வரம்புரையில், ''பத்தாண்டுகள்'' எனும் சொற்றொடருக்குப் பதிலாக, ''பத்தாண்டுகள் ஆறு மாதங்கள்'' எனும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும். 89—ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**3.** முதன்மைச் சட்டத்தில் என்ன அடங்கியிருந்தபோதிலும், தொடக்கநிலை கூட்டுறவு சங்கங்களின் நேர்வில், 2011ஆம் ஆண்டு மே திங்கள் 25ஆம் நாளன்றும் அது முதற்கொண்டும் செயல் விளைவு கொள்ளும் வகையிலும், மைய மற்றும் உச்ச நிலை கூட்டுறவுச் சங்கங்களின் நேர்வில், 2011ஆம் ஆண்டு மே திங்கள் 26ஆம் நாள் முதற்கொண்டு செயல்விளைவு கொள்ளும் வகையிலும், தனி அலுவலராக அதிகாரங்களைச் செலுத்துகிற மற்றும் கடமைகளை ஆற்றுகிற நபர் ஒவ்வொருவரும், இந்தச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டத்தின் 89ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின்கீழ் மேற்சொன்ன கூட்டுறவு சங்கங்களின் அத்தகைய தனி அலுவலராக நியமிக்கப்பட்டுள்ளதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்; மற்றும் 2011ஆம் ஆண்டு மே திங்கள் 25ஆம் நாளன்று தொடங்கி இந்தச் சட்டம் ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் தேதியன்று முடிவடைகிற காலத்தின்போது மேற்சொன்ன தனி அலுவலர்களால் செய்யப்பட்ட செயல் எதுவுமோ அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதுவுமோ, இந்தச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டத்தின்கீழ் செல்லத்தக்க வகையில் செய்யப்பட்டிருப்பதாகவோ அல்லது எடுக்கப்பட்டிருப்பதாகவோ கொள்ளப்படுதல் வேண்டும். செல்லத்தக்க தாக்குதல்

(ஆளுநரின் ஆணைப்படி)

**இரா. கதிர்வேல்,**
*அரசுச் செயலாளர் (பொறுப்பு),*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**ச. சந்திரசேகரன்,**
*இயக்குநர்,*
*தமிழ்ப் பிரிவு, சட்டத் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.